# ஊழலைத் துடைத்தொழிக்க டிபிகேஎல் தரப்பு முனைப்பு

## - டத்தோ பண்டார் அறிவுறுத்தல்



கோலாலம்பூர், அக்.4-

கோலாலம்பூர், மாநகர் மன்றத்தில் (டிபிகேஎல்) ஊழலை துடைத்தொழிக்கும் நடவடிக்கையாக ஒழுக்கத்தின் அவசியம் தொடர்பில் உள்கண்காணிப்பு, கூடுதல் பயிற்சி வழங்க அந்த அமைப்பு கவனம் செலுத்தப்படவுள்ளதாக டத்தோ பண்டார் டத்தோஸ்ரீ டாக்டர் மைமுனா முகமட் ஷரிஃப் தெரிவித்தார்.

அமலாக்க அதிகாரிகள் ஒவ்வொருவரும் ஊழல் நடவடிக்கையின் ஆபத்துகுறித்து ஆழமான அறிவையும் விழிப்புணர்வையும் கொண்டிருப்பதோடு சந்தேகத்திற்குரிய முயற்சியிலிருந்து விலகி புகாரளிப்பதை உறுதி செய்ய தமது தரப்பு கொண்டிருக்கும் பொறுப்புடையின் ஓர் அங்கமாக இந்நடவடிகை உள்ளது என்றார் அவர்.

ஊழல், கையூட்டு நடவடிக்கைகள் தேசத்தின் எதிரி என அமலாக்க அதிகாரிகள் அனைவருக்கும் நினைவூட்ட விரும்புகின்றேன். இது சம்பந்தப்பட்ட நபரின் நற்பெயரை மட்டுமன்றி மொத்த இலாகாவின் பெயருக்கும் களங்கம் ஏற்படுத்தும். அதிலும் அமலாக்க கட்டமைப்பின் செயல்பாடுகளை பலவீனமாக்குவதோடு இந்த ஊழல் நடவடிக்கையானது நீதியை பாதித்து பொதுமக்களின் நம்பிக்கையை சரியச் செய்யும்.

எனவே இந்த எதிர்மறையான கொள்கையை துடைத்தொழிப்பது நமது அனைவரின் ஒருங்கிணைந்த பொறுப்பு என்று நேற்று கோலாலம்பூர் மாநகர் மன்ற அமலாக்க கட்டடத்தில் நடைபெற்ற 55ஆவது அமலாக்க தினக் கொண்டாட்டத்தில் உரையாற்றும் போது அவர் குறிப்பிட்டார்.

அதேசமயம் மாநகர் மன்ற அதிகாரிகள் அனைவரும் ஒழுக்கத்தை வலுப்படுத்தி முன்னெடுக்கும் அனைத்து நடவடிக்கைகளிலும் பொறுப்புடைமையைக் கொண்டிருக்க வேண்டும் என மைமுனா அறிவுறுத்தினார்.